## மாதந்தோறும் மகளிருக்கு ரூ. 1000 வழங்கும்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை: 3 மாதங்களில் அதிக மகளிருக்கு வழங்கப்படும்!

## சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 30 இணையர்களுக்கு

## திருமணத்தை நடத்தி வைத்து – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,பிப்.16-**

**சென்னை, பசுமை வழிச்சாலையில் உள்ள கபாலீஸ்வரர் - கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை ஏற்பாட்டில், 30 இணையர்களின் திருமணத்தை நேற்று முன்தினம் (14.2.2025) காலை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர், உரையாற்றுகையில் மாதந்தோறும் மகளிருக்கு ரூ. 1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் இன்னும் 3 மாதங்களில் அதிக மகளிருக்கு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.**

**திருமணத்தை நடத்தி வைத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை சார்பில், 30 இணையர்களுக்கு திருமணத்தை உங்களின் முன்னிலையில், நடத்திவைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### சிறப்பான நிகழ்ச்சி

பொதுவாகவே, எந்த நிகழ்ச்சிக்குக் கிளம்பினாலும் அப்போது கிடைக்கும் உற்சாகத்தை விட, ஒரு திருமண நிகழ்ச்சிக்குச் செல்லும் போது கூடுதலாக மகிழ்ச்சி ஏற்படும். அதுவும் இன்றைக்கு, சென்னை, தென்மேற்கு மாவட்டத்தில் நடக்கின்ற இந்த நிகழ்ச்சி. வரும்போது எனக்கு ஒரு சின்ன சந்தேகம். இந்த நிகழ்ச்சி, தென்மேற்கு மாவட்டத்தில் நடக்கின்றதா அல்லது கிழக்கு மாவட்டத்தில் நடக்கின்றதா என்று ஒரு சந்தேகம் வருகிறது. எங்கே நடத்தினாலும், அண்ணன் சேகர்பாபு அவர்கள் நடத்துகின்ற நிகழ்ச்சி. அது எப்போதுமே சிறப்பான நிகழ்ச்சியாகக் கண்டிப்பாக அமைந்திருக்கும்.

### காதலர் தினத்தில் 30 இணையருக்கு திருமணம்!

ஒரு திருமணத்துக்குச் செல்கிறபோதே அப்படி என்றால், இன்றைக்கு இந்த மேடையில், 30 இணையர்களுக்கு நாம் திருமணத்தை நடத்தி வைக்கிறோம். 30 இணையர்கள் அவர்களின் இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கிறார்கள். அதுவும், இன்றைக்கு மிகமிக முக்கியமான நாள். இன்றைக்கு காதலர் தினம். இதைச் சொன்னால், சில பேருக்குக் கோபம் வரும். அவர்கள் காதலர் தினத்தைக் கொண்டாடக்கூடாது என்று சொல்வார்கள். காதலர் தினத்தைக் கொண்டாடாமல் இருக்க முடியுமா? ஒவ்வொரு நாளுமே காதலர் தினம்தான். இப்படியொரு முக்கியமான நாளில் இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கிறோம். ஆகவே, உங்கள் அனைவரின் சார்பாக, இந்த 30 மணமக்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, நீங்கள் நல்ல நண்பர்களாக நல்ல காதலர்களாக வாழ்க்கை முழுவதும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்பதுதான்.

அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் எந்த நிகழ்ச்சியையுமே மிக மிக சிறப்பாக நடத்தக்கூடியவர். அதற்கு ஒரு சின்ன எடுத்துக் காட்டாகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார். நம் `திராவிட மாடல் அரசு' பொறுப்புக்கு வந்ததில் இருந்து, அண்ணன் அவர்களின் முயற்சியால், கிட்டதட்ட 2 ஆயிரத்து 600 கோயில்களுக்கு, குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

### கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன!

நம் திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, ரூபாய் 7 ஆயிரத்து 400 கோடி மதிப்புள்ள 7 ஆயிரத்து 500 ஏக்கர் அளவிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 1 லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர் அளவிலான கோயில் நிலங்கள் அடையாளம் காணப்பட்டு அளவீடு செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, அவரின் சாதனைகள் நீண்டுகொண்டே போய் கொண்டு இருக்கின்றன. `அன்னதானத் திட்டங்கள்', `கல்விப்பணி', `அறப்பணி' என இந்து சமய அறநிலையத்துறை எடுக்கும், அத்தனை முயற்சிகளுக்கும் என் பாராட்டுகள், வாழ்த்துகள். இதற்கு முந்தைய ஆட்சியினர், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், திருமணங்கள் செய்து வைக்கும் திட்டத்தையே நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆனால், நம் ஆட்சி அமைந்ததும், நம் முதலமைச்சர் அவர்கள் போறுப்பேற்ற பிறகு, 2022-ஆம் ஆண்டு முதல் அண்ணன் சேகர்பாபு அவர்கள் 1,800 திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார். இந்த ஆண்டு 700 திருமணங்கள் நடத்தி வைக்க திட்டமிட்டுள்ளார்.



### தாய் வீட்டு சீர்வரிசைப் பொருட்கள்!

இங்கே 30 திருமணங்களையும், சீர்வரிசையுடன், சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, இந்து சமய அறநிலையத்துறைக்கும், அதன் அமைச்சர் அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கும், அந்த துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பெண்ணுக்கு திருமணம் ஆகின்ற போது, பொதுவாக தாய்வீட்டில் இருந்து சீர்வரிசையை அனுப்புவார்கள். இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள், உங்களுக்குத் தாயாக இருந்து, நம் திராவிட மாடல் அரசு சார்பில், 30 ஜோடிகளுக்கும் சீர்வரிசைப் பொருட்களைக் கொடுத்திருக்கிறார். உங்களில் பலரின் பெயர் பட்டியலைப் பார்த்தேன்.

### மாபெரும் புரட்சி

பெயருக்குப்பின்னால் படிப்பை குறிக்கும் வகையில், பி.இ., எம்.பி.ஏ., எம்.எஸ்.சி என்று பட்டங்கள் இருந்தன. அதிலும் குறிப்பாக, இங்கே மணமகள்களில் 95 சதவிகித சகோதரிகள் பட்டதாரிகளாக இருக்கிறீர்கள். அதிலும் புரொபசனல் டிகிரி முடித்தவர்கள் நிறைய பேர் இருக்கிறீர்கள். இதெல்லாம் தமிழ்நாட்டில் மட்டுமே சாத்தியம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, உங்கள் தாத்தா- பாட்டி, காலத்தில் இதுவெல்லாம் சாத்தியமா என்றால், நிச்சயம் சாத்தியம் கிடையாது. அப்போது, பெண்கள் படிப்பதற்கு உரிமையே கிடையாது. இன்றைக்கு நம் வீட்டுப்பிள்ளைகள் பெயருக்குப் பின்னால், படிப்பு பட்டமாக இருக்கிறது. அன்றைக்குப் படிக்க விடாமல் செய்த அந்த இழிவிலிருந்து, நம் மக்களை மீட்டெடுத்து, மாபெரும் புரட்சியை இந்த மண்ணில் நிகழ்த்திக் காட்டியதுதான் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கத்தாலும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உழைப்பாலும், அவர்கள் தந்த திட்டங்களாலும், இன்றைக்கு நீங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடுமே கல்வியில் சிறந்தொரு மாநிலமாக உயர்ந்திருக்கிறது.

### உலகமே பாராட்டுகிறது!

குறிப்பாக, தமிழ்நாட்டின் `கிராஸ் என் ரோல்மென்ட் ரேசியோ', அதாவது உயர்கல்விச் சேர்க்கை சராசரி, 47 சதவிகிதமாக உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் உயர்கல்விச் சேர்க்கையில் முதல் இடத்தில் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளால், நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களால், இன்றைக்கு இந்திய ஒன்றியம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகமே தமிழ்நாட்டைப் பார்த்து பாராட்டிக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார், `வீடு நன்றாக இருந்தால்தான் நாடு நன்றாக இருக்கும்' என்று குறிப்பிடுவார். ஆகவே, நான் மணமக்களைக் கேட்டுக்கொள்வது, வீட்டை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் உங்களை இந்த நாட்டைப் பார்த்துக் கொள்ள நம் முதலமைச்சர் அவர்கள் உழைத்துக்கொண்டு இருக்கிறார்.

### மகளிருக்கான விடியல் பயணம்!

கழக அரசு அமைந்து கிட்டத்தட்ட 4 வருடங்கள் ஆகின்றன. இந்த 4 வருடங்களில், நம் `திராவிட மாடல் அரசு' பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. அதில் சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான விடியல் பயண திட்டத்துக்குதான். அந்தத் திட்டத்தின் மூலம், கிட்டதட்ட 620 கோடிப் பயணங்களை, மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் மகளிர் ஒவ்வொருவரும் மாதம் 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

அடுத்து, பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் படித்தால் மட்டும் போதாது என, அவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று, பெண்களுக்குப் புதுமைப்பெண் என்ற திட்டம். உயர்கல்வி சேருகிற ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் 1,000 ரூபாய் கொடுக்கும் வகையில், புதுமைப்பெண் திட்டத்தை, நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாணவிகள் மட்டுமல்ல, மாணவர்களுக்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை, நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த இரண்டு திட்டங்கள் மூலம், கிட்டத்தட்ட 8 லட்சம் மாணவ - மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

### 20 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்!

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் அதுதான், பள்ளிக் குழந்தைகளுக்கான `முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'. காலையில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படிக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்குச் சென்றால் தரமான உணவு. அதன்பிறகுதான் அவர்களுக்குக் கல்வி. இதன் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம், அதைச் செயல்படுத்தியவர் நம் தலைவர் அவர்கள். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று, இன்னும் 3 மாதங்களில் இன்னும் அதிகமான மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கவும், நம் திராவிட மாடல் அரசு, நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த அரசு உங்களுக்கான அரசாக உங்களுக்காக உழைகின்ற அரசாக செயல்பட்டு வருகிறது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.2.2025) சென்னை இராஜா அண்ணாமலைபுரம் கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் நடைபெற்ற திருமண விழாவில் 30 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன். துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன் மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர்.சி.பழனி மற்றும் மணவீட்டார் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை!

உங்களுக்கெல்லாம் தெரியும் செய்திகளில் பார்த்து இருப்பீர்கள். சமீபத்தில் ஒன்றிய அரசு இந்தாண்டுக்கான பட்ஜெட்டைத் தாக்கல் செய்தது. நான்கூட சொன்னேன் இது ஒன்றிய அரசு பட்ஜெட் இல்லை. ஒருத்தருக்குகூட பய்ன்படாத `யூஸ்லெஸ் பட்ஜெட்' என்று சொன்னேன். ஏனென்றால், தமிழ்நாடு அரசுக்கு, அவர்கள் ஒரு ரூபாய் கூட நிதி ஒதுக்கவில்லை.

அரசுக்குத்தான் நிதி ஒதுக்கவில்லை என்றால், தமிழ்நாடு என்ற பெயர்கூட அந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இருபது நிமிடம் பாராளுமன்றத்தில் இந்த பட்ஜெட்டை படித்தார். ஒரு முறைகூட தமிழ்நாடு என்ற பெயர் அதில் உச்சரிக்கப்படவில்லை.

இப்படி இருக்கும்போதுகூட நம் கழக அரசு, இந்த அளவுக்குத் திட்டங்களை செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த அரசுக்கு நீங்கள் எல்லோரும் தொடர்ந்து ஆதரவு கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள், கொடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அரசின் சாதனைகளை அரசின் திட்டங்களை நீங்கள்தான் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அரசில் இருக்கின்ற எங்களுக்கெல்லாம், முதலமைச்சர் அவர்கள்தான்

பிராண்ட் அம்பாசிடர். ஆனால், இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடராக மக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் திகழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, இன்னும் பல ஆண்டுகள் உங்களுக்காக உழைக்க, நம் முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார். இப்போதும் போல எப்போதும் உங்கள் ஆதரவைத் தாருங்கள், தருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இங்கே இல்வாழ்வில் இணைகின்ற 30 இணையர்களும் வாழ்வில் ஒற்றுமையோடு வாழ வேண்டும்.

இங்கு வரவேற்புரை ஆற்றிய துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் பேசும்போது, `துணை முதலமைச்சர் இந்தத் திருமணங்களை நடத்தி வைக்கிறார், அவரது கைகள் மிகவும் ராசியான கைகள்' என்று சொன்னார். எனக்கு ராசி மீது எல்லாம் நம்பிக்கை கிடையாது.

### ஒரே ஒரு வேண்டுகோள்!

நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சுயமரியாதையுடன் நடந்தீர்கள் என்றால், நிச்சயம் உங்கள் வாழ்க்கை இனிமையான வாழ்க்கையாக, சுகமான வாழ்க்கையாக அமையும். மணமக்களுக்கு மட்டும் ஒரே ஒரு வேண்டுகோள். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணன் சேகர்பாபு அவர்கள் சொன்னார், `நூறாண்டு வாழ வேண்டும் என்று நான் வாழ்த்தவில்லை. இருநூறு ஆண்டு வாழ வேண்டும்' என்று வாழ்த்தினார். அது சாத்தியமில்லை. ஆனால், அவர் எந்த `இருநூறு' என்று சொன்னார் என்று உங்களுக்கு எல்லாம் புரிந்திருக்கும். அதற்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்திக்கொண்டு, அடுத்த ஒரு வருடத்தில் கிடைக்கும் வெற்றிக்கு நீங்கள் முக்கிய காரணமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இல்வாழ்வில் இணைந்துள்ள நீங்கள் அனைவரும் பெரியாரும்- பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் - மாநில சுயாட்சியும் போல, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும் - தமிழ்நாடும் போல, முதலமைச்சர் அவர்களும் - திராவிட மாடலும் போல, பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், பி.கே. சேகர் பாபு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை மாநகர மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மயிலை த.வேலு, ஜோசப் சாமுவேல், வெற்றி அழகன், சென்னை மாநகர துணை மேயர் மகேஷ்குமார், சுற்றுலா-பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.மணிவாசகம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் பழனி ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆணையர்கள் திருமகள், ஹரிப்ரியா, மாநகராட்சியின் மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், பகுதிக் கழகச் செயலாளர்கள் நந்தனம் மதி, முரளி, சுதாகர், மகேஷ்குமார், வானவில் விஜய், தனசேகர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.